# முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2024 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதி 1 ம்பிரதிவாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.460 /2019

வா.சா.1 **வெங்கடேஸ்வரி**

**1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

எனது தரப்பில் யார் யாரை சாட்சியாக விசாரிக்க உள்ளேன் என்றால் என்னை தவிர வேறு சாட்சிகள் யாரும் இல்லை. நான் குடியிருக்கும் இடத்திற்கும், தாவா சொத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் எவ்வளவு தூரம் என்ற விபரம் தெரியாது பஸ்ஸில் தான் போகவேண்டும் பஸ் கட்டணம் ரூ.15/- ஆகும். எனது மருமகளின் அம்மாயி சொத்துக்குதான் நான் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். என் மருமகளுக்கு சொந்த ஊர் எது என்றால் தொட்டம்பட்டி ஆகும். என் மருமகள் சொந்த ஊரில் 8 ம் பிரதிவாதியும், 11 ம் பிரதிவாதியும் குடியிருந்து வருகிறார்கள். என் மருமகளை திருமணம் செய்த பிறகு தான் மருமகளின் ஊரை பற்றி தெரியும் என்றால் சரியல்ல அதற்கு முன்பாகவே தெரியும். நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் தெரியும். தாவா சொத்திற்கு செக்குபந்தி விபரம் தெரியும்.

தாவா சொத்திற்கு செக்குபந்தியானது அரிசிக்காரர் வீட்டிற்கு செல்லும் வண்டிபாதைக்கும் கிழக்கும், அரிசிக்காரர் வீட்டிற்கு வடக்கும், மொடக்குறிச்சி செல்லும் ரோட்டிற்கு தெற்கும், கதிர்வேல்காட்டிற்கு மேற்கும் அமைந்துள்ளது. தாவா சொத்தில் மின் இணைப்பு உள்ள விபரமும், வீடு உள்ள விபரம் தெரியாது. தாவா சொத்து என் மருமகளின் அம்மாயிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் என் மகன் கார்த்திகேயன் தாக்கல் செய்துள்ளார். என் மகன் தாக்கல் செய்துள்ள வாசாஆ.1 ஆவணத்தில் சொத்தின் உரிமையாளர் சாமியப்பன் என்று

காட்டப்பட்டுள்ளது என்றால் சாமியப்பனுடன் சேர்த்து மொத்தம் 7 பேருக்கு பாத்தியம் ஆகும். எனக்கு எழுத படிக்க தெரியாது. வாசாஆ.2 ஆவணத்திலும் சொத்தின் உரிமையாளர் சாமியப்பன் என்று தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

தாவா சொத்தானது சாமியப்பனுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அதனால் தான் கடந்த 2011 ம் வருடம் சாமியப்பனும், அவரது மகன்களும் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. சாமியப்பன் அவரது மகன்களுடன் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை செல்லாது என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. சாமியப்பன் மகன் மோகன்ராஜ் என்பவர் 2013 ம் ஆண்டு செய்து கொடுத்த கிரையம் செல்லாது என்று பரிகாரம் கேட்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. வாசாஆ.5 கிரைய ஆவணமும் செல்லாது என்று பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. என் சம்மந்தி சாமியப்பனுக்கு முதல் சகோதரியா என்றால் கடைசி சகோதரி ஆவார். என் சம்மந்தி பர்வதம் இறக்கும்வரையில் சாமியப்பன் குடும்பத்தை பொறுத்து எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றும், என் மருமகளை என் மகனுக்கு திருமணம் செய்து கொண்டு வந்த பிறகு தான் என் சம்மந்தி குடும்பத்தை பற்றி தெரிய வரும் என்றால் சரிதான்.

என் மருமகளுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் திருமணம் நடந்து 15 வருடம் ஆகிறது. என் சம்மந்தி பருவதம் இறந்த பிறகு அவருக்கு யார் யார் வாரிசுகள் என காட்டுவதற்கு வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு மூல ஆவணம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியாததால் எது மூல ஆவணம் என்று தெரியாது எல்லா ஆவணங்களையும் என் மகன் தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தானது சாமியப்பனுக்கு தாழ்த்தப்பட்டோர் நல திட்டத்தின்படி அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. சின்னபன்னாடிக்கு பாத்தியப்பட்டு வாரிசு அடிப்படையில் அனுபவித்து வருகிறார்கள். சின்னப்பன்னாடிக்கு பாத்தியப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் என் மகன் தாக்கல் செய்துள்ளார்.

தாவா சொத்து சின்னப்பன்னாடிக்கு பாத்தியப்பட்டது ஆவணங்ள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், ஆவணங்கள் தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு மூல ஆவணங்கள்

தாக்கல் செய்யாததால் பாகப்பிரிவினை கோர முடியாது என்றால் சரியல்ல. 42 வருடங்களுக்கு முன்பாக சின்னப்பன்னாடி இறந்து விட்டார் என்பதை காட்டுவதற்கு இறப்புசான்று மற்றும் வாரிசு சான்று தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என் சம்மந்தி மற்றும் மருமகள் உயிருடன் இருந்த காலத்தில் பாகம் கேட்டு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1994 ம் வருடம் என் மருமகளுக்கு சொத்து வந்து சேர்ந்து விட்டதாகவும், அதற்கு முன்பாகவே என் சம்மந்தி பர்வதத்திற்கு சொத்து வந்து சேர்ந்துவிட்டதாக வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

எனது வழக்குரையில் பருவதம் உயிருடன் இருந்த காலத்தில் சொத்துக்கள் பற்றி ஏதும் தெரிவிக்காமல் இருந்த நிலையில் தற்போது எனது மருமகளுக்கும், என் சம்மந்திக்கும் சொத்து வந்து அடைந்துவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் சதாசிவம் என்பவர் 2013 ம் வருடம் ஒரு பகுதியை கிரையம் வாங்கியுள்ளார் என்றும், அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அவசிய தரப்பினர் சேர்க்கப்படாத காரணத்திற்காக இந்த தாவா பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் உரிய தரப்பினரை சேர்க்காததாலும், உரிய பரிகாரம் கேட்காததாலும், அதற்குரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தாதாலும் தாவா சொத்து சாமியப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதாலும் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**